# மலேசியாவில் மிகப் பெரிய மொத்த வணிக மையம் GM KLANG

# Road to BONANZA 12 பிரச்சாரம் வழி வாடிக்கையாளர்களுக்கு நன்றி நவில்தல்

மலேசியாவிலேயே மிகப்பெரிய மொத்த வணிக மையமாக GM KLANG மலேசிய சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது. கிள்ளான் மற்றும் அன்றி நாடு முழுவதும் இது பிரபலமடைந்துள்ளது. வெளிநாட்டுப் பயணிகள் விரும்பி வரும் வணிக மையமாகவும் திகழ்கிறது.

நாட்டை கோவிட்-19 கொடுந்தொற்றுக் கிருமி ஆட்கொண்டு பரவியதற்கு முன்பாக உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வாடிக்கையாளர்கள் மிகப்பெரிய அளவில் குவிந்து வந்தனர். எப்போதுமே விழாக்கோலம் பூண்டிருக்கும்.

கிள்ளான் மாநகரின் ஓர் அடையாளமாகச் மாறியிருக்கிறது. இந்த மொத்த வணிக மையத்தில் கிட்டத்தட்ட 2,500 கடைகள் உள்ளன. அனைத்து வகையான மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்களுக்கும் ஓரிட முகப்பிடமாக புகழ் பெற்றிருக்கிறது.

இது தவிர சிறு வியாபாரிகள் அவரவர் சார்ந்த வணிகத்திற்கான அனைத்து வகையான பொருட்களை ஒரே கூரையின் கீழ் வாங்கிச் செல்லும் வசதி உண்டு. இதனால் தேவையான பொருட்களைத் தேடி அலையும் பிரச்சினை வணிகர்களுக்கு இல்லை.

இவற்றையெல்லாம் கடந்து ரம்மியமான, ஜனரஞ்ஜகமான, மனத்துக்கு இதம் தரக்கூடிய ஓர் இடமாகவும் GM KLANG வணிக மையம் விளங்குகிறது. கிள்ளான் மாநகரின் ஒட்டுமொத்த அழகையும் வாடிக்கையாளர் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

இதனால் கிள்ளான் மாநகரின் சுற்றுலாத்துறை தூதுவராகவும் GM KLANG உயரிய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறது. சுவர் வரைபடத்தில் கிள்ளான் அரச நகர், பண்டமாரான், பூலாவ் கெத்தாம், கிள்ளான் மாநகர் ஆகியவற்றின் பேரழகு கண்களுக்கு நல்ல விருந்து.

மன மகிழ்வுக்கும் ஓய்வு எடுப்பதற்கும் உணவு வகைகளை ருசி பார்ப்பதற்கும் உரிய இடங்களையும் சிறு சிறு கடைகளையும் அது கொண்டிருக்கிறது.

### 12ஆம் ஆண்டில் தடம் பதிக்கிறது GM KLANG

இப்பிரமாண்டமான GM KLANG வணிக மையம் 2021 அக்டோபர் 1ஆம் தேதி அதன் 12ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது.

இவ்வேளையில் தன்னுடைய விசுவாசமிக்க மற்றும் தொடர்ந்து ஆதரவு நல்கி வரும் வாடிக்கையாளர்களுக்கு நன்றி நவிலும் விதமாக பிரமாண்ட போட்டியை GM KLANG நடத்துகிறது. இதற்கு சிலாங்கூர் சுற்றுலாத்துறையின் (Tourism Malaysia) முழு ஆதரவு கிடைத்துள்ளது.

Road To Bonanza 12 எனும் போட்டி தொடர்பான பிரச்சாரம் 1 ஜூன் 2021 தொடங்கி 31 டிசம்பர் 2021 வரை நடைபெறுகிறது. இதில் பங்கேற்பது மிகவும் எளிது. ஒவ்வொரு மாதமும் 2 பரிசுகள் வழங்கப்படும். வெற்றியாளர்கள் இருவருக்கு தலா 2,000 ரிங்கிட் மதிப்புள்ள சுற்றுலா பேக்கேஜ் வழங்கப்படும்.

### பிரமாண்ட பரிசுகள்

மொத்தம் 10 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் பிரதான பரிசுக்கான போட்டிக்குத் தேர்வு செய்யப்படுவர். பிரதான பரிசு - பிரபல ரகத்திலான ஒரு மோட்டார் சைக்கிள்.

போட்டியில் பங்கேற்கும் விதிமுறைகள்: வாடிக்கையாளர்கள் E-WALLET செயலியைப் பயன்படுத்தி GM KLANG வணிக மையத்தில் உள்ள ஏதாவது ஒரு கடையில் ஒரே ரசீதில் 100 ரிங்கிட் அல்லது அதற்கு மேல் செலவிட வேண்டும்.

தொடர்ந்து பாரத்தில் உள்ள QR CODE-ஐ ஸ்கேன் செய்து விவரங்களை நிரப்ப வேண்டும். E-WALLET பரிவர்த்தனை ரசீது மற்றும் செலவு செய்த ரசீது ஆகியவற்றைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

அதன் பின்னர் பாரத்தில் வழங்கப்பட்டுள்ள போட்டி artwork link-ஐ வாடிக்கையாளர்கள் அவரவர் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

கோவிட்-19 இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுக் கொண்டவர்கள் போட்டியில் பங்கேற்று பரிசுகளை வெல்லும் அதிர்ஷ்டத்தைப் பெறலாம்.

**தன்னுடைய வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்கள், பணியாளர்கள் நலன் பேணும் வகையில் வணிக மையம் முழுவதும் மற்றும் அதன் சுற்றுப்புறமும் எல்லா நேரத்திலும் தூய்மையாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கும் தனது கடப்பாட்டை GM KLANG தொடர்ந்து உறுதி செய்யும்.**

